| | |
|---|---|
| **சார்பு நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்** | |
| நாள் | 05.03.2025 |
| O.S. No. | 157/2004 |
| வா.சா.1 | வித்யா |

2025ம் ஆண்டு மார்ச் மாதம் 05–ம் நாள் வித்யா என்பவரின் சாட்சியாக விசாரிக்கப்படுபவர் 1969ம் ஆண்டின் 54வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின்படி திரு.எஸ்.ஜீவாபாண்டியன்,M.Com.,M.Phil.,M.L., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | வித்யா | சமயம் | : |
| தந்தை பெயர் | : | | தொழில் | : |
| கிராமம் | : | | வயது | : |
| தாலூக்கா | : | | | |

<u>குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி –</u>

(சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது)

1. அண்ணமலை முதலியார் உயிருடன் இருந்தபோதே, அவரும், அவருடைய 5 மக்களும் தனித்தனியாக வசித்து வந்தார்கள் என்றால் இல்லை. அண்ணமலை முதலியாரின் உதவியோடு வழக்கு அயிட்டம் எண்.1 வது சொத்தை எனது தாத்தாவான மொட்டையன் வாங்கினார் என்றால் சரியல்ல. வழக்கு 2வது அயிட்ட சொத்தை, பெரியராமன் என்பவருக்கு அண்ணாமலை முதலியார் வாய்மொழியாக கொடுத்தார் என்றால் சரியல்ல. சின்னராமனும் அண்ணாமலை முதலியாரின் உதவியுடன் சில சொத்துக்களை வாங்கினார் என்றால் இல்லை. மேற்படி 3 நபர்களும் சொத்து வைத்திருந்ததால்தான், 1976ஆம் ஆண்டில் ஆறுமுகத்திற்கும், சிவராமனுக்கும் வழக்கு 3வது அயிட்ட சொத்தை, உயில் ஆவணத்தின்மூலம் அண்ணாமலை முதலியார் எழுதிக்கொடுத்தார் என்றால் சரியல்ல.
2. 1955ஆம் ஆண்டில் அண்ணாமலை முதலியார் குடும்ப ஏற்பாடு செய்து கொண்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது முதல் விசாரணையில் பத்தி 3ல் மேற்படி குடும்ப ஏற்பாட்டை பற்றி

சொல்லியுள்ளேன் என்றால் எனக்கு அது பற்றி எனக்கு தெரியாது. நான் சொல்லுகிறபடி, குடும்ப ஏற்பாடு நடைபெறவில்லை என்றும், நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

3. வழக்கு சொத்துக்களை அண்ணாமலை முதலியாரின் மகன்கள் 5 பேரும் தனித்தனியாக அனுபவித்து வந்தார்கள் என்றும், நான் சொல்லுகிறபடி, கூட்டு சொத்தாக அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் சின்னராமனுக்கு சொந்தமான சொத்துக்களை நான் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல, சேர்த்துள்ளேன். மேற்படி சொத்தானது இவ்வழக்கில் எத்தனையாவது அயிட்ட சொத்து என்றால் 3வது அயிட்ட சொத்தாகும். மேற்படி 3வது அயிட்ட சொத்தை ஆறுமுகத்திற்கும், சிவராமனுக்கும் உயில் மூலம் எழுதி வைத்ததை செல்லாது என குறிப்பிட்டுதான் நான் வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். மேற்படி உயில் செல்லாது என்று எந்த வழக்கில் தீர்ப்பானது என்றால் வழக்கு எண் ஞாபகமில்லை, அதற்கான தீர்ப்பின் நகலை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்லுகிறபடி, மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.
4. நான் சொல்லுகிறபடி, எந்த வழக்கிலும் உயிலைப்பற்றி நேரடியாக தீர்மானிக்கவில்லை என்றால் சரியல்ல. சின்னராமனுக்கு குழந்தைகள் இல்லாமல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். உயில் மூலம் சிவராமன் குடும்பத்திற்கு சொத்துக்களை சின்னராமனின் மனைவி எழுதிக்கொடுத்தார் என்றால் சரியல்ல. ஆறுமுகத்திற்கு குழந்தைகள் இல்லை என்றால் சரிதான். ஆறுமுகத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை சிவராமன் குடும்பத்திற்கு 24.04.2000ஆம் தேதியிட்ட உயில் மூலமாக ஆறுமுகத்தின் மனைவி எழுதிக்கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.
5. அண்ணாமலை முதலியார் தனது சொத்துக்களை சட்டப்படியாக செல்லக்கூடிய ஆவணங்கள் மூலமாக தனது 4 மக்களுக்குள் சொத்துக்களை பிரித்து கொடுத்தார் என்றால் இல்லை. முதல் மகன் பெரியராமனுக்கு கொடுத்த சொத்து மட்டும் செல்லுபடியாகக்கூடிய ஆவணத்தின்மூலம் சொத்தை கொடுக்கவில்லை என்றால் சரிதான். பெரியராமன் பி அட்டவணை சொத்துக்களை அவர் வைத்துக்கொண்டும், ஏ அட்டவணை சொத்துக்களை சின்னராமன், மொட்டையன், சிவராமன் மற்றும் ஆறுமுகம் ஆகியோருக்கு 15.06.1974ஆம் தேதியிட்ட வா.சா.ஆ.8 ஆவணத்தின் மூலம் கொடுத்துவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பி

அட்டவணை சொத்துக்களை பெரியராமன் வைத்துக்கொண்டதாக சொல்வதால் மட்டும் சட்டப்படி உரிமையாளர் ஆக மாட்டார் என அ.வ.எண் 321/1991 என்ற வழக்கில் உத்தரவாகியுள்ளது என்றால் சரிதான்.

6. பெரியராமனுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை, எனது தாத்தாவான மொட்டையனைத்தவிர மற்ற அனைவரும் ஏற்றுக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. வழக்கை தள்ளுபடி செய்து, வழக்கு 2 வது அயிட்ட சொத்தானது, பெரியராமனுக்கு சொந்தமானது என தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. சிவராமனின் மனைவியும், ஆறுமுகத்தின் மனைவியும் வழக்கு 4வது அயிட்ட சொத்தை தனிப்பட்ட முறையில் கிரையம் வாங்கினார்கள் என்றால் அண்ணாமலை முதலியார்தான் வாங்கினார். 22.08.1984ஆம் தேதியில் 4வது அயிட்ட சொத்தை சின்னராமனின் மனைவியும், சிவராமனின் மனைவியும் சேர்ந்து வாங்கி, 28.10.1987ஆம் தேதியிட்ட உயில் ஆவணத்தின் மூலம் சின்னராமனின் மனைவி தனது பங்கை சிவராமனின் மனைவிக்கு எழுதிக் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. 2வது அயிட்ட சொத்தை, 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு ஒதுக்கியும், மேற்படி சொத்தின் சுவாதீனத்தை ஒப்படைத்து உத்தரவிட வேண்டும் என்றால் சரியல்ல. வழக்கு 3 வது அயிட்ட சொத்தை, சிவராமன் என்பவர் ராம்குமாருக்கு கிரையம் கொடுத்தார் என்றும், மேற்படி கிரையத்தை ஒப்புக்கொண்டு, நாங்கள் சம்மதம் தெரிவித்து பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் இல்லை. வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**(12 மற்றும் 14வது பிரதிவாதிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)**